***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 213/2015 – P.W. 5 /LW7***

| | |
|---|---|
| *Name* | சுப்ரியா காவல் ஆய்வாளர்<br>திருவாரூர் நகர காவல் நிலையம் |
| *Father/Husband's Name* | |
| *Village* | |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 48 |

*1 முதல் 3 எதிரி கள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.*

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 21.05.2026.*

*அரசு தரப்பில் முதல் விசாரணை*

1. நான் தற்போது திருவாரூர் நகர காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 02.11.2015 ம் தேதியன்று மன்னார்குடி நகர காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் வாசுதேவன் நிலைய பொறுப்பில் இருந்தபோது மன்னார்குடி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த ராஜேந்திரன் மகன் ராஜபாண்டி என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று வந்து மன்னார்குடி நிலைய குற்ற எண்.1034/2015 இதச பிரிவுகள் 294(பி), 352, 324, 506(2) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

வழக்கை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றையதினம் மதியம் 01.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் குமார் மற்றும் செல்வம் ஆகியோர்கள் முன்னிலையில் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார். (**பார்வை மகசர மற்றும்**

**வரைபடம் அ.சா.ஆ.5 மற்றும் 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பட்டியல் சாட்சிகள் 1 முதல் 4 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார்.

5. சம்பவம் உண்மை என தெரியவந்ததும் எதிரிகளை தேடிய போது 02.11.2015 ம் தேதியன்று 16.30 மணிக்கு மன்னார்குடி மேலபாலம் அருகே நின்று கொண்டிருந்தவர்களை எதிரிகள் சுரேஷ், சதீஸ்குமார், கதிரவன் ஆகியோர்களை குற்றக்காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற அடைப்புக்காவலுக்கு உட்படுத்தியுள்ளார். வழக்கு கோப்பை அடுத்தக்கட்ட விசாரணைக்காக என் பார்வைக்கு வைத்தார்.

வழக்கை அடுத்தக்கட்ட விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நான் சாட்சிகளை விசாரணை செய்ததில் சிறப்பு உதவி ஆய்வாளர் வாசுதேவன் அவர்களிடம் சொன்ன அதே சங்கதிகளை என்னிடம் சொன்னதால் மறுவாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பின்னர் இவ்வழக்கில் காயம் அடைந்த ராஜபாண்டிக்கு சிகிச்சையளித்த மருத்துவர் சீனிவாசராவ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், விபத்து பதிவேடு இணைந்த காயச்சான்று பெற்று தாக்கல் செய்தேன். **மேற்படி விபத்து பதிவேடு உ/இ காயச்சான்று அசா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது**.

இத்துடன் எனது விசாரணையை முடித்து எதிரிகளின் செய்கையானது இதச பிரிவுகள் 294(பி), 352, 324, 506(2) ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என குற்ற இறுதியறிக்கை 11.12.2015 ம் தேதியன்று தாக்கல் செய்தேன்.

**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அசா.1 எனது விசாரணையில் எனது குடும்பத்துடன் வந்ததாகவும் மழை பெய்து கொண்டிருந்ததாகவும் சொல்லவில்லை என்றால் சரிதான். அசா.2 கண்ணதாசன் எனது விசாரணையில் தீபாவளிக்கு டிரஸ் எடுத்துக்கொண்டு வரும்போது புகார்தாரருக்கு காயம் ஏற்பட்டது என்று கூறவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் தொடர்பு இல்லை என்றாலும், சந்தேகத்தின் அடிப்படையில் எதிரிகளுடைய பெயர் சேர்க்கப்பட்டியிருக்கிறது என்றும், சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளாமல் தயார் செய்து வைத்த ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், அசா.1 க்கு ஏற்பட்ட காயத்திற்கும், எதிரிக்கும் எந்ததொடர்பு இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1வது எதிரியின் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.

**<u>3 வது எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.